மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கை பத்திரிகையிலே மற்ற இடங்களிலே எல்லாம் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கூட. மாண்புமிகு நிதி அமைச்சர் நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் அவர்கள் நேற்றையதினம் அது சம்பந்தமாக பதில் அளித்து இருக்கின்றார்கள்.

(பிற்பகல் 2-10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ஈ.வே.கி.ச. இளங்கோவன், கோ. வீரய்யன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் எ.எஸ்.ஏ. ஆறுமுகம், கே, சுப்பராயன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்-என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,65,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (2-4-1987) காலை 10-00-மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(ஆ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 28-11-1986 ஆம் நாளிட்ட 3304 ஆம் எண் அரசாணையில்

1987 ஏப்ரல் 1]

வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப் படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/1984) 22(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

58. சென்னை, இந்திய பிராணிகள் நல வாரியத்திற்கு சொந்தமான எம்.எஸ்.எம். 4369—எண்ணுள்ள நடமாடும் பிராணிகள் சிகிச்சை வண்டிக்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து உள்துறையின் 26-12-1986 ஆம் நாளிட்ட 3598 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

59. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாராவி படுபொருட்கள் (கட்டுப்பாடு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 27-10-1986 ஆம் நாளிட்ட 1374 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

90. கோரிக்கை எண். 4 தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்.)

91. 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய்-வரவினங்கள்) மீதான அறிக்கையில் வணிக வரிகள்—அறக்கட்டளைத் துறை மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1982-83) 21-வது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை.

92. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972-73 ஆம் ஆண்டிற்கான (வருவாய்-வரவினங்கள்) குறித்து பொதுக் கணக்குக் குழு (1977-78) அளித்த முதலாவது அறிக்கை மற்றும் குழுவின் (1980-82) பதிமூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கைப் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை.

93. 1982-83-ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை.